## செங்கல்பட்டு மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளையின் 2021-22 ஆம் நிதியாண்டிற்கான ஆண்டு அறிக்கை

தமிழ்நாடு மாவட்ட கனிம கட்டமைப்பு விதிகள் 2017–ன்படி, செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியரின் செயல்முறை ஆணை எண்.8218 / கனிமம் / 2020 நாள்.08.12.2020ன்படி, செங்கல்பட்டு மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளை நிர்வாக குழு மற்றும் மேலாண்மைக் குழு அங்கத்தினர்களாகக் கொண்டு உருவாக்கப்பட்ட அறக்கட்டளைப் பத்திரமானது ஆவண எண்.34/2020-ன்படி, செங்கல்பட்டு சார்பதிவாளர் அலுவலகத்தில் 09.12.2020 அன்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேலும், Government of India, Ministry of Mines Order dated.23.04.2021 in F.No.7/9/2021-M.IV. உத்திரவின்படி செங்கல்பட்டு மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளையின் நிர்வாககுழு மற்றும் மேலாண்மை குழுவில் புதிய உறுப்பினர்களை இணைத்து செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியரின் செயல்முறை ஆணை எண்.8218/கனிமம்/2020, நாள்.23.08.2021ன்படி உருவாக்கப்பட்டுள்ளது.

| வ. எண். | நிர்வாகக் குழு அமைப்பு | வ. எண். | மேலாண்மைக் குழு அமைப்பு |
|---|---|---|---|
| 1 | மாவட்ட ஆட்சியர்,<br>செங்கல்பட்டு. | 1 | மாவட்ட ஆட்சியர்,<br>செங்கல்பட்டு. |
| 2 | மாவட்ட வருவாய் அலுவலர்,<br>செங்கல்பட்டு. | 2 | மாவட்ட வருவாய் அலுவலர்,<br>செங்கல்பட்டு. |
| 3 | உதவி இயக்குநர்,<br>புவியியல் மற்றும் சுரங்கத்துறை,<br>செங்கல்பட்டு. | 3 | உதவி இயக்குநர்,<br>புவியியல் மற்றும் சுரங்கத்துறை,<br>செங்கல்பட்டு. |
| 4 | திட்ட இயக்குநர்,<br>மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை,<br>செங்கல்பட்டு. | 4 | பாராளுமன்ற உறுப்பினர்,<br>காஞ்சிபுரம் / திருப்பெரும்புதூர். |
| 5 | துணை இயக்குநர்,<br>சுகாதாரப் பணிகள்,<br>செங்கல்பட்டு. | 5 | சட்டமன்ற உறுப்பினர்,<br>பல்லாவரம் / தாம்பரம்/ செங்கல்பட்டு/ திருப்போரூர்/ செய்யூர்/ மதுராந்தகம். |
| 6 | முதன்மை கல்வி அலுவலர்,<br>செங்கல்பட்டு. | 6 | திட்ட இயக்குநர்,<br>மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை,<br>செங்கல்பட்டு. |
| 7 | மாவட்ட கருவூல அலுவலர்,<br>செங்கல்பட்டு. | 7 | மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்,<br>செங்கல்பட்டு. |
| 8 | மாவட்ட சமூக நல அலுவலர்,<br>செங்கல்பட்டு. | 8 | உதவி இயக்குநர்,<br>ஊரக வளர்ச்சித்துறை,<br>செங்கல்பட்டு. |
| 9 | உதவி இயக்குநர், (ஊராட்சிகள்),<br>செங்கல்பட்டு. | 9 | மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்,<br>செங்கல்பட்டு. |

| | | | |
|---|---|---|---|
| 10 | திரு. கே. தனசேகர், தலைவர், காஞ்சிபுரம் மாவட்ட கருங்கல் குவாரி ஒப்பந்த தாரர்களின் நலவாழ்வு சங்கம். | 10 | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம், மறைமலைநகர். |
| | | 11 | மாவட்ட வன அலுவலர், செங்கல்பட்டு.. |
| | | 12 | செயற்பொறியாளர், பொதுப்பணித்துறை, நீர்வள ஆதார துறை, செங்கல்பட்டு. |
| | | 13 | உதவி இயக்குநர், நில அளவைப் பதிவேடுகள் துறை, செங்கல்பட்டு. |
| | | 14 | மாவட்ட கருவூல அலுவலர், செங்கல்பட்டு. |
| | | 15 | மாவட்ட சமூக அலுவலக அலுவலர், செங்கல்பட்டு. |
| | | 16 | துணை இயக்குநர், சுகாதாரப் பணிகள், செங்கல்பட்டு. |
| | | 17 | மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர், செங்கல்பட்டு. |
| | | | |

செங்கல்பட்டு மாவட்ட கனிம அறக்கட்டளைக்காக, இந்தியன் வங்கி, செங்கல்பட்டு வங்கிக் கிளையில் வங்கி கணக்கு (கணக்கு எண்.6957390475) துவக்கப்பட்டு, சிறுவகை கனிமங்கள் குவாரி செய்ய அரசுக்கு செலுத்தப்படும் உரிமக் கட்டணத்தின் அடிப்படையில் உரிய விதிகளின்படி மாவட்ட கனிம கட்டமைப்பிற்காக நிதி வசூலிக்கப்பட்டு வருகிறது. மேலும் செங்கல்பட்டு மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளை அலுவலக செலவீனத்திற்கான வங்கி கணக்கு எண்.6989533688 துவங்கி பராமரிககப்பட்டு வருகிறது.

செங்கல்பட்டு மாவட்டத்தில் 12.01.2015–க்கு முன்னர் சிறுவகை கனிமங்களாக கிராவல் மற்றும் சவுடு மண் ஆகியவற்றை ஊராட்சி ஏரி மற்றும் பொதுப்பணித்துறை ஏரிகளிலிருந்து வெட்டி எடுத்துக் கொள்ள தற்காலிக அனுமதிகள் வழங்கப்படும் இனங்களுக்கும், சிறுவகைகனிம குவாரிக்குத்தகைகளுக்கு செலுத்தப்படும் உரிமக் கட்டணத்தில் 30 சதவிகித தொகை மற்றும் 12.01.2015–க்கு பின்னர் வழங்கப்பட்ட அனைத்துவகையான குத்தகைகளுக்கு செலுத்தப்படும் உரிமக் கட்டணத்தில் 10 சதவிகித தொகை கனிம அறக்கட்டளை நிதியாக **19.05.2017** முதல் வசூல் செய்யப்பட்டு வருகிறது.

மேலும் 12.01.2015 முதல் 19.05.2017 வரையிலான குத்தகை காலங்களில் ஏற்கனவே செலுத்தப்பட்ட உரிமக்கட்டணத்திற்குண்டான கனிம அறக்கட்டளை நிதியாக முறையே 10 மற்றும் 30 சதவிகித தொகையை கனிம அறக்கட்டளை நிதிக்கு செலுத்திட சம்பந்தப்பட்ட குத்தகைதாரருக்கு அறிவிப்பு வழங்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

செங்கல்பட்டு மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளை நிதியாக 31.03.2022 வரை மொத்த வரவு ரூ.2,44,49,220/-இதுநாள் வரை மாவட்ட கனிம அறக்கட்டளை நிதியிலிருந்து செங்கல்பட்டு மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளை அலுவலக செலவிற்காக மொத்த வரவிலிருந்து 5% ரூ.7,00,016/- ஒதுக்கிடு செய்யப்பட்டுள்ளது. மேலும் இயக்குநர், புவியியல் மற்றும் சுரங்கத்துறை அலுவலக செலவினத்திற்காக மொத்த வரவிலிருந்து 1% ரூ.1,40,004/- மற்றும் திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகையில் ரூ.45,71,628/-ம், மற்றும் மாவட்ட அறக்கட்டளையில் தவறுதலாக வரவு வைக்கப்பட்ட தொகை ரூ.50,000/– திரும்ப மனுதாரருக்கு வழங்கப்பட்டது உட்பட செலவழிக்கப்பட்ட தொகை ரூ.54,61,648/- தற்போது (31.03.2022) ரூ.1,89,87,572/- (ரூபாய் ஒரு கோடியே என்பத்தியொன்பது இலட்சத்து என்பத்தியெழாயிரத்து ஐநூற்றி ஏழுபத்து இரண்டு மட்டும்) செங்கல்பட்டு மாவட்ட அறக்கட்டளை வங்கி கணக்கில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் குவாரிப்பணிகளால் நேரடியாகவோ, மறைமுகமாகவோ பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளாக 2020-2021ம் நிதியாண்டில் 55கிராம ஊராட்சிகள் கண்டறியப்பட்டு நலத்திட்டங்கள் மேற்கொள்ள நிர்வாகக் குழு மற்றும் மேலாண்மைக் குழு ஒப்புதல் பெறப்பட்டது.

2020 – 2021 ஆம் நிதியாண்டில் செங்கல்பட்டு மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளை நிதியிலிருந்து ஒதுக்கப்பட்ட 2 திட்டங்களுக்கான தொகை ரூ.65,71,728/- மதிப்பிலான நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு ரூ.45,71,728/–க்குரிய திட்டபணிகள் நிறைவடைந்து நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள திட்டப்பணிகள் நடைப்பெற்று வருகிறது.

| வ. எண் | திட்டத்தின் பெயர் | பணியின் விவரம் | மதிப்பு (ரூபாயில்) | நடைமுறைப்படுத்தும் அமைப்பு | ஒப்பளிப்பு வழங்கப்பட்ட நாள். |
|---|---|---|---|---|---|
| 1 | மக்கள் நலன், சுகாதார மேம்பாடு | மருத்துவ மனைக்கான திட்ட உபகரணங்கள் கொள்முதல். | 45,71,628 | துணை இயக்குநர் (சுகாதாரம்), செங்கல்பட்டு. | 15.02.2021 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2 | குடிநீர் வழங்கல் | காஞ்சிபுரம் ஹைரோடு இடதுபுறம் பைபாஸ் சாலை வழியாக பழவேலி பம்ப் ஹவுஸில் 250 மி.மீ. குழாய் அமைத்தல் | 20,00,000 | நகராட்சி ஆணையர், செங்கல்பட்டு. | 17.02.2021 |
| | | மொத்தம் | **65,71,628** | | |

2021 – 2022 ஆம் நிதியாண்டில் செங்கல்பட்டு மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளை நிதியிலிருந்து ஒதுக்கப்பட்ட 1 திட்டம் ரூ.50,00,000/- மதிப்பிலான நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு திட்டப்பணிகள் நடைபெற்று வருகிறது.

| வ. எண் | திட்டத்தின் பெயர் | பணியின் விவரம் | மதிப்பு (ரூபாயில்) | நடைமுறைப்படுத்தும் அமைப்பு | ஒப்பளிப்பு வழங்கப்பட்ட நாள். |
|---|---|---|---|---|---|
| 1 | மக்கள் நலன், சுகாதார மேம்பாடு | உடல்நலம் மற்றும் நோய்த்தடுப்பு சிகிச்சைக்கான பல்நோக்கு கட்டிடத்தின் கட்டுமானம் | 50,00,000 | வட்டார வளர்ச்சி அலுவலர், புனித தோமையர் மலை. | 16.08.2021 |
| | | மொத்தம் | **50,00,000** | | |

மாவட்ட கனிம வள அறக்கட்டளை நிதியை மாநில தலைமை கணக்காயரால் அங்கீகரிக்கப்பட்ட தணிக்கையாளரை கொண்டு 2021 – 2022ம் நிதியாண்டிற்கான தணிக்கை பணி மேற்கொள்ளப்பட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

தலைவர்,
செங்கல்பட்டு மாவட்ட கனிம அறக்கட்டளை /
மாவட்ட ஆட்சியர்,
செங்கல்பட்டு.